## பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர்

# தேஜஸ்வி யாதவ் பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, நவ. 10-**

**பிகார் மாநிலத்தின் எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலை தளப் பதிவு வருமாறு:-**

பீகார் மாநிலத்தின் துடிப்புமிக்க இளம் எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!

சமூகநீதி, மதச்சார்பின்மை, சமத்துவம் ஆகியவற்றில் தாங்கள் கொண்டுள்ள பீடிப்பானது முற்போக்கான பிகாரைத் தொடர்ந்து ஊக்குவிக்கட்டும்.

நியாயமான, அனைவரையும் அரவணைத்துப் போற்றும் ஓர் எதிர்காலத்துக்காகப் பணியாற்றி வரும் தாங்கள் வலிமையோடும் வெற்றியோடும் திகழ வாழ்த்துகிறேன்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த சென்னை கிழக்கு மாவட்டக் கழக விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் முத்து ரவிச்சந்திரன் மகன் ஆர்.விஜய்சந்திரன் திருமண வரவேற்பு விழாவில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் கலந்துகொண்டு மணமக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

# திரு.வி.க.நகர் வடக்குப் பகுதி - வட்டங்கள்தோறும் பாக நிலை முகவல்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் வேண்டுகோள் !

*சென்னை, நவ.10-*

*திரு.வி.க.நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :*

*திரு.வி.க நகர் வடக்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் பாகநிலை முகவர்கள் கூட்டம் கீழ்க்கண்ட விவரப் படி நடைபெறுகிறது.*

*இதில் மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்.*

*கூட்ட விவரம் வருமாறு:-*

*இன்று (10.11.2024) காலை 10 மணி -சமூக நல கூடம் வ.உ.சி.நகர் 1வதுதெரு-72 அ & 72-எம்.இசட். அபோய் எம்.ஏ. டீக்கா*

*10.11.2024 மாலை 6.00 மணி -வசந்தம் மாளிகை பட்டேல் சாலை, பெரம்பூர் -71&71அ-பரிமள சுரேஷ்பாபு மா. ருத்ரமூர்த்தி*

*11.11.2024 மாலை 7.00 மணி -டவர் ஹால் சந்திரயோகி சமாதி சாலை -74&74 அ-எஸ். புஷ்பராஜ் ஜி.கிருஷ்ணகுமார்*

*இக்கூட்டங்களிலும் மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்.*

*நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., தாயகம் கவி எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, சரிதா மகேஷ்குமார், புனிதவதி எத்திராசன், மு.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிகின்றனர்.*

*எனவே பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதி கள், வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், பாகநிலை முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுகொண்டுள்ளார்.*





காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. அவசரச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் ஏற்பாட்டில் ஏ.வீரபத்திரன் தலைமையில் கே.பூபதி, எச்.பாஸ்கரன், டி.கார்த்திக் ஆகியோர் முன்னிலையில் க.ரமேஷ் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ம.பற்குணன், ஜி.ஜெகந்நாதன், ஓ. தண்டபாணி, சி.ஆர்.மதுரைவீரன், பி.பாலசந்தர், சி.ஆர்.நரேஷ்குமார், எம்.நாகராஜ், எம்.சார்லஸ், ஆர். ராதாகிருஷ்ணன், எஸ்.மன்னா ராஜாகண்ணா மற்றும் பகுதிக்குட்பட்ட வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் பிறந்தநாள் விழா சிறப்பாக நடத்துவது குறித்தும், பி.எல்.ஏ.2 பொறுப்பாளர்கள் அமைத்தல் குறித்தும், வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. ஜெ.வி.சந்திரசேகர் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கஞ்சனூர் கோ.கண்ணையன்
### நவம்பர் 10 (1988)



**கழகம் துவங்கிய நாள் முதலே தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோரோடு இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**கஞ்சனூர் கிளைக் கழகச் செயலாளர், திருப்பனந்தாள் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கஞ்சனூர் ஊராட்சித் தலைவராகவும் – நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# துணை முதல்வரின் ஒரு நாள் பயணம்!



துணை முதலமைச்சராக ஆனவுடன் முதன் முறையாக திருவண்ணாமலை மாவட்டத்துக்கு கழகத்தின் இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் வரப் போகிறார் என்றவுடனே இங்குள்ள கழகத் தொண்டர்களிடையே உற்சாகம் தொற்றிக் கொண்டதை சமூக வலைதளங்கள் முழுவதும் புறப்பட்டு வந்த வரவேற்புச் செய்திகளில் இருந்தே அறிய முடிந்தது.

எப்போதும் கழகத் தலைவரை வரவேற்கும் அதே உற்சாகத்துடன் மாவட்ட எல்லையான கீழ் பென்னாத்தூர் முதல் அவர் தங்குமிடம் வரையில் சாலை நெடுகிலும் அவருக்கு வரவேற்பினை அளித்திட சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்களும் தொண்டர்களும் உற்சாகமாக தயாரான போது மாவட்டக் கழகச் செயலாளர், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் கண்டிப்பான அறிவிப்பு நிர்வாகிகள் அனைவருக்கும் வந்து சேர்ந்தது.

ஒரே ஒரு இடத்தில் மட்டும்தான் வரவேற்பு நடக்கும். அனைத்து கழக நிர்வாகிகளும் அங்குதான் வர வேண்டும். துணை முதலமைச்சரை வரவேற்க கழகக் கொடிகளைத் தவிர வேறெந்த ஆடம்பர தோரணங்களோ, அலங்காரங்களோ கூடாது. மிக முக்கியமாக ஃப்ளக்ஸ் பேனர்கள் கூடவே கூடாது எனும் அந்த கண்டிப்பான அறிவுறுத்தல் கழக நிர்வாகிகளின் ஆர்வத்தை மட்டுப் படுத்தியதே தவிர அவர்களின் உற்சாகத்தை எந்தவிதத்திலும் குறைக்கவில்லை.

பொதுப்பணித்துறை அமைச்சரின் அறிவுறுத்தலின் படியே துணை முதல்வர் எங்கள் மாவட்டத்தில் இருந்த அந்த 24 அணி நேரத்திலும் எந்த இடத்திலும் ஒரு பேனர் கூட வைக்கப்படவில்லை. ஊடகங்கள், எதிர்க்கட்சியினர் என யாரும் குற்றம் என எதையும் சுட்டிக்காட்டாத வண்ணம் அத்தனை நிகழ்ச்சிகளும் எளிமையாகவும், நேர்த்தியாகவும், மக்கள் பாராட்டும்படியும் நடந்ததற்கு முழு முதற்காரணம் பொதுப் பணித்துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு என்றால் மிகையாகாது.

கழகத் தோழர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த நாளும், நேரமும் வந்தது.

18.10.2024 மாலை 5:00: எங்கள் இளம் தலைவர், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் கழகத்தின் கோட்டையாம் திருவண்ணாமலை மாவட்டத்தின் எல்லையான கீழ்பென்னாத்தூரை வந்து அடைந்தார். மாவட்டக் கழகச் செயலாளர் எனும் முறையில் பொதுப்பணித்துறை அமைச்சர் செஞ்சிக்கு முன்கூட்டியே சென்று வரவேற்று உடனழைத்து வந்தார்.

வரவேற்புக்கென அமைக்கப்பட்டிருந்த பந்தலில் சட்டப்பேரவையின் துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழகத்தின் சார்பு அணி நிர்வாகிகள், முக்கியமாக இளைஞர் அணி தம்பிமார்களின் பெரும் பட்டாளம், தாய்மார்கள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் என ஆயிரக்கணக்கில் காத்திருந்தனர்.

மாலை நேரச் சூரியனின் ஒளியை தம் முகத்தில் வாங்கி அதை புன்னகையாக பிரதிபலித்தவாறு காரின் மேற்பரப்பு திறப்பு வழியாக நின்றவாறு எங்கள் இளஞ்சூரியன் வந்தது. இருபுறமும் காத்திருந்த பொதுமக்களின் உற்சாக கையசைப்புகளுக்கு பதில் வணக்கம் கூறியவாறு மங்கல இசை முழக்கத்துடன் வரவேற்பு மேடைக்கு வந்தடைந்தார் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர்.

முதல் பொன்னாடையை மாவட்டக் கழகச் செயலாளர் பொதுப்பணித்துறை அமைச்சர் வழங்க, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் தொடர கழக முன்னோடிகள் அளித்த அத்தனை வரவேற்பையும் இன்முகத்துடன் பெற்றுக் கொண்டார்.

கழகத்தின் மூத்த முன்னோடிகள், முக்கியமாக முதிர்ந்த வயதினில் உள்ளவர்கள் முகத்தில் கூடுதல் மகிழ்ச்சியை காண முடிந்தது. எந்த மாவட்டத்துக்கு என்னை அழைத்தாலும் அங்கே மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழியை வழங்கும் நிகழ்ச்சி கட்டாயம் நடைபெற வேண்டும் என்ற நிபந்தனையை விதித்து கழகம் காத்த முன்னோடிகளை கவுரவித்தவர் அல்லவா? அத்தகைய மூத்த முன்னோடிகள் நமது துணை முதலமைச்சரை கன்னம் தொட்டு வாழ்த்திய போது அவர்கள் கலைஞரைக் கண்டனர். நாங்கள் கழகத்தின் எதிர்காலத்தைக் கண்டோம்.

18.10.2024 மாலை 6:00 திருவண்ணாமலை நிகழ்ச்சி நிரலில் முதல் நிகழ்ச்சியாக கிரிவலப் பாதையில் அரசு செய்து வரும் மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்வது. துணை முதல்வர் அங்கே சென்ற போது ஏற்கனவே மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அங்கே வந்து காத்திருந்தார்.

அண்மைக்காலமாக ஆந்திரா, தெலுங்கானாவில் இருந்து பல லட்சம் பக்தர்கள் ஒவ்வொரு வார இறுதி நாட்களிலும் திருவண்ணாமலை கோவிலுக்கும், கிரிவலம் செய்யவும் வருகை தருவதால், மலைச் சுற்றும் பாதையில் பல்வேறு வசதிகளை, கூடுதல் பாதுகாப்பு அம்சங்களை அரசு செய்து வருகிறது. அதிலும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் முன்னெடுப்பில் உலகத் தரத்திலான கழிப்பிட வசதிகள் அங்கே தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்டு வருவதை துணை முதல்வர் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை இந்து விரோத கட்சி என முத்திரையிட பாஜக சங்கிகள் எவ்வளவோ முயற்சிகளை செய்தாலும், தமிழ்நாட்டு மக்களின் மீது உண்மையான அக்கறை கொண்டு, அவர்களின் உணர்வுகளை மதித்து நமது திராவிட மாடல் அரசு அறநிலையத் துறை மூலம் கோவில்களுக்கும், பக்தர்களுக்கும் செய்து வரும் வளர்ச்சித் திட்டங்களை பாராட்டாதவர்கள் யார்தான் உள்ளனர்?

கிரிவலப் பாதை ஆய்வினை முடித்துக் கொண்டு நேராக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று வரவிருக்கும் கார்த்திகை தீபத் திருவிழா ஏற்பாடுகளை ஆய்வு செய்த துணை முதல்வர், அங்கிருந்த ஊர் பொதுமக்கள், வியாபாரிகளிடம் சிறப்பாக விழா நடைபெற ஆலோசனைகளைக் கேட்டுப் பெற்ற விதம் அனைவரையும் நெகிழச் செய்தது.

18.10.2024 இரவு 7;30 கார்த்திகைதீபத் திருவிழா குறித்தான ஆய்வு கூட்டத்தை முடித்துக் கொண்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட துணை முதல்வர்,

நேராக தங்குமிடத்துக்குச் செல்வார் என அனைவரும் எதிர்பார்த்திருக்க, அவரோ அங்கிருந்து நேரடியாக மாவட்ட விளையாட்டு மையத்தில் உள்ள வீரர்களின் தங்குமிடத்துக்குச்சென்றார்.

துணை முதல்வரின் சர்ப்ரைஸ் விசிட் பயிற்சி முடித்து களைத்து வந்திருந்த வீரர்கள் அனைவருக்கு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியதைக் காண முடிந்தது. விளையாட்டு வீரர்களுக்காக தயார் செய்யப்பட்டிருந்த உணவை ருசித்துப் பார்த்து அதன் தரத்தையும் சோதித்து ஆலோசனைகளை அளித்த பிறகு அங்கிருந்து புறப்பட்டார்.

18.10.2024 இரவு 8:30 இந்த முறையும் துணை முதல்வர் தங்குமிடம் செல்லவில்லை என்பது அவரைப் பின் தொடர்ந்து சென்ற எங்களுக்குப் புரிந்த போது, சோர்வடையாமல் பணி புரியும் அவருடைய உத்வேகம் கண்டு பெரும் வியப்புதான் வந்தது. ஆம்! துணை முதல்வரின் வாகனம் வழியில் இருந்த அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குள் நுழைந்தது.



அங்கு மருத்துவர்களின் எண்ணிக்கையை வருகைப் பதிவேடு கொண்டு ஆய்வு செய்த துணை முதல்வர் அங்கு அனுமதிக்கப் பட்டிருந்த நோயாளிகளுக்கு ஆறுதல் சொல்லியவாறு நேரடியாக பிரசவ வார்டுக்குச் சென்றதின் காரணம் அடுத்த நாள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில்தான் எங்களுக்குப் புரிந்தது.

18.10.2024 இரவு 9:30 காலை சென்னையில் வழக்கமான அலுவலகப் பணிகள், கலந்து கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளை எல்லாம் முடித்துக் கொண்டு திருவண்ணாமலைக்குப் புறப்பட்டு, வழியெங்கும் கழகத்தினரின் வரவேற்புகளையும் சலிக்காமல் ஏற்றுக் கொண்டு, மாலை முதல் இரவு வரையில் ஐந்து இடங்களில் நிகழ்ச்சி மற்றும் ஆய்வுகளை முடித்த பின்னரே தங்குமிடம் சென்றார் துணை முதல்வர்.

19.10.24 காலை 10:00 துணை முதல்வரின் இன்றைய தினம் திருவண்ணா மலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள அனைத்து பஞ்சாயத்துகளுக்கும் விளையாட்டுத் துறை சார்பாக கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழாவுடன் தொடங்கியது.

மிகச் சரியான நேரத்துக்கு துணை முதல்வரின் வாகனம் விழா அரங்கினுள் நுழைய, சில நிமிடங்கள் முன்கூட்டியே அங்கு சென்று காத்திருந்த எங்களுக்கு பெரும் வியப்புக் காத்திருந்தது. ஆம்! இதுவரையில் தமிழ்நாட்டு அரசு விழாக்களில் நடந்திராத வழக்கமாக துணை முதல்வரின் இரு புறமும் இருந்த நாற்காலிகளில் மூத்த அமைச்சர்கள் அமராமல் எங்கள் மாவட்டத்தில் இருந்து தேசிய அளவில் சாதனைகளைப் புரிந்த ஒரு விளையாட்டு வீரரும், வீராங்கனையும் அமர வைக்கப்பட்டதை அங்கிருந்த அத்தனை ஆயிரம் பொதுமக்களும் வியப்புடன் பார்த்து ரசித்தனர்.

ஒரு அமைச்சர் தனது துறையின் சாதனையாளர்களை இதற்கு மேல் கவுரவப்படுத்தி விட முடியாது எனும் அளவுக்கு துணை முதல்வரின் அந்தச் செயல் இருந்தது.

19.10.2024 காலை 11:30 துணை முதல்வரின் அடுத்த நிகழ்ச்சியாக சிறப்புச் செயலாக்கத் துறையின் திட்டங்களை ஆய்வு செய்யும் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கே செல்லும் வழியில் இளைஞர் அணி தொடங்கி நடத்தி வரும் கலைஞர் நூலகத்தில் இறங்கி நூலகத்தைப்பார்வை யிட்டார்.

அந்த நூலகத்தில் உள்ள பல்துறை சார்ந்த புத்தகங்கள், வாங்கப்படும் வார, தினப் பத்திரிக்கைகள் போதுமானவையாக உள்ளனவா என அங்கே படித்துக் கொண்டிருந்த பொதுமக்களிடம் கேட்டறிந்து, நூலகத்தின் ஆய்வுக் குறிப்பேட்டில் தனது ஆலோசனைகளையும், பாராட்டுகளையும் பதிவு செய்தார்.

19.10.2024 காலை 11:45 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் தொடங்கியது.

மாவட்டத்தின் அத்தனை துறை அதிகாரிகளும் கலந்து கொள்ளும் அந்த கூட்டத்தை நடுநாயகமாக துணை முதல்வரும் அவரது வலது புறம் அமைச்சர், சட்டப்பேரவைத் துணைத் தலைவர், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், இடது புறம் துறையின் செயலாளர் மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரியான திரு. திரேஸ் அஹ்மது மற்றும் மாவட்டத்தின் பிற அதிகாரிகள் அமர ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கினார் துணை முதல்வர்.

முதல் துறையாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் "முதல்வரின் முகவரி" திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட, அதில் உள்ள தரவுகள் குறித்தான விவரங்களைக் கேட்டார் துணை முதல்வர். இப்படியே ஒவ்வொரு பகுதியாக ஆய்வு சென்று கொண்டிருந்தபோது, "மக்களுடன் முதல்வர்" திட்டம் ஆய்வுக்கு வந்தது.

அதில் நிலுவையில் உள்ள மனுக்களின் விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்த துணை முதல்வர், தீர்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த மனு ஒன்றினை கையில் எடுத்து அவரது பின்புறம் அமர்ந்திருந்த உதவியாளரிடம் தனது போனை வாங்கி, அந்த மனுவில் இருந்த மொபைல் எண்ணை தானே அழைக்கத் தொடங்கியவுடன் ஒட்டுமொத்த அரங்கமும் நிமிர்ந்து அமர்ந்தது. இதை யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை என்பது தெளிவாக உணரப்பட்டது.

மறுபுறம் மனுதாரர் போனை எடுத்தவுடன்,

வணக்கம், நான் உதயநிதி பேசுறேன். நீங்க தெரு விளக்கு எரியலைன்னு மனு கொடுத்திருந்தீங்க இல்லே! இப்போ அது சரி செய்யப்பட்டு விட்டதா என கேட்டார்.

அரங்கம் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தது.

மனுதாரருக்கோ ஒன்றும் புரியவில்லை. ஐயா! யாருங்க? என அவர் கேட்க, துணை முதல்வரோ மீண்டும் நான்தாங்க உதயநிதி ஸ்டாலின் பேசுறேன். உங்க தெரு விளக்கு பற்றி கேட்கிறேன் என்றார்.

ஐயா! ஐயா! வணக்கம்யா. நீங்களே கூப்பிட்டு பேசுவீங்கன்னு எதிர்பார்க்கலைங்க. இன்னமும் அப்படியே தாங்க இருக்கு. பூச்சிப் பொட்டுங்க தொல்லைகளாலே இருட்டிலே வெளியே போகவே பயமா இருக்கு.

துணை முதல்வர், நிமிர்ந்து சம்பந்தப்பட்ட பி.டி.ஓவை பார்க்கிறார். அவர் அப்படியே உறைந்து போய் நிற்க அரங்கிலோ பேரமைதி. அந்த இறுக்கத்தைத் தளர்க்கும் விதமாக துணை முதல்வர், இனிமே இப்படி பண்ணாதீங்க. பொறுப்புடன் வேலை செய்ங்க. இந்த பிரச்சினையை இன்று மாலைக்குள் சரி செய்து விட்டு கலெக்டரிடம் ரிப்போர்ட் தரணும் என்றபோது, சபாஷ்! கலைஞர் ரத்தம்னு அப்படியே நிரூபிக்கிறார் என்று ஒரு மூத்தப் பத்திரிகையாளரின் குரல் கேட்டது.

அந்த அரங்கம் எத்தனையோ ஆய்வுக் கூட்டங்களைக் கண்டிருக்கும்! அங்கிருந்த அதிகாரிகளும் எத்தனையோ அமைச்சர்களை, துறை உயர் அதிகாரிகளைக் கண்டிருப்பார்கள். ஆனால், அப்படியொரு காட்சியை அதுவரையிலும் யாரும் கண்டதில்லை.

அதே போல ஒவ்வொரு துறை ஆய்வின் போதும், துணை முதல்வரிடம் அளிக்கப்படும் புள்ளி விவரங்களை அப்படியே நம்பி விடாமல், அவரது துறையின் மூலம் எடுக்கப்பட்ட ஆய்வு முடிவுகளையும் உடன் வைத்துக் கொண்டு ஒப்பிட்டு ஆணைகளைப் பிறப்பித்த விதம் பிரமிக்கத்தக்கதாக இருந்தது.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆய்வின் போது, முந்தைய தினம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பிரசவ வார்டுகளில் அவர் கண்ட தாய்மார்களின் பெயர்களை நினைவில் வைத்து சொல்லி, அவர்களின் வயது, பிறக்கும் குழந்தைகளில் சில எடைக்குறைவாக பிறப்பதின் பிரச்சினைகள் என விரிவாக கலந்து ஆலோசித்தார்.

அதன்படி, ஊட்டச்சத்துக் குறைபாடு கொண்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துமாவு கொடுத்தால் மட்டும் போதாது! அவர்களின் உடல் நலன் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கிட்டத்தட்ட நண்பகலில் தொடங்கிய ஆய்வுக் கூட்டத்தை மூன்று மணி நேரம் சற்றும் சோர்வடையாமல் அதே துடிப்புடன் நடத்தி முடித்து அங்கிருந்து புறப்பட்டார் துணை முதல்வர்.

**எஸ்.கே.பி. கருணா**
மாநிலச் செயலாளர்
தி.மு.க. பொறியாளர் அணி



அவருடன் பயணித்த அனைவருக்கும் கடும் பசி. துணை முதல்வர் மதிய உணவை முடித்துக் கொண்டு அன்று மாலை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆய்வுக் கூட்டத்துக்கு செல்ல வேண்டும் என்பதால் அங்கிருந்து தங்குமிடம்தான் செல்வார் என அனைவரும் கருதிக் கொண்டிருந்தபோது துணை முதல்வரோ மேலும் ஒரு திட்டம் வைத்திருந்தார்.

19.10.2024 மாலை 3:00 துணை முதல்வரின் கான்வாய் திடீரென திருவண்ணாமலையில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையத்துக்கு சென்றது. கடும் வெயிலில் அங்கே இறங்கிய துணை முதல்வர் அங்கே அமைக்கப்பட்டுள்ள வசதிகள், கட்டுமானப் பணிகள் அனைத்தையும் முழுமையாக நடந்து சென்று ஆய்வு செய்தார்.



அப்போது அங்கிருந்த தொழிலாளர்களிடம்அவர்களுக்கானவசதிகள் குறித்தும் கேட்டறிந்து, பேருந்து நிலையத்தை மேலும் விரிவாக்கும்படி யும், விரைவில் கட்டி முடித்துத் திறக்கும்படியும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

19.10.2024 மாலை 5:00 துணை முதல்வரின் 24 மணி நேர அரசு முறை சுற்றுப் பயணம் நிறைவு பெறும் நேரம் இது. இந்த 24 மணி நேரத்தில் அவர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள், சந்தித்த மனிதர்கள், அவர் கரம்கூப்பி வணங்கிய கழகத்தின் மூத்த முன்னோடிகளின் மலர்ந்த முகங்கள், அவர் பார்வை திரும்பும் இடமெல்லாம் ஆர்ப்பரித்து நின்ற கழகத்தின் இளைஞர் அணிப் பட்டாளம் என அனைத்தும் என் கண் முன்னே வந்து சென்றது.

கழகத்தின் கோட்டை என்றழைக்கப்படும் எங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் துணை முதல்வர் வருகை தந்து, சிறிதளவும் ஆடம்பரமோ, ஆர்ப்பாட்டமோ இன்றி வெகு இயல்பாக பொதுமக்களிடம் பழகியதும், இன் முகத்துடன் அவர்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றதும், ஆய்வுக்கு சென்ற இடங்களில் எல்லாம் முழுமையான விவரங்களை கேட்டறிந்து ஆலோசனைகளை சொன்ன பாங்கும் இன்னும் பல ஆண்டுகள் எங்கள் அனைவர் நினைவிலும் பசுமையாக நிலைக்கும் என்ற உணர்வுடன் கழகத்தின் எதிர்காலம், எங்கள் இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாட்டு துணை முதலமைச்சரை திருவண்ணாமலை மண்ணிலிருந்து வணங்கி வழியனுப்பி வைத்தோம்.